8.11.2013

## ஏழாவது ஆண்டு அறிக்கை

காசி அய்யா கல்வி அறக்கட்டளை துவங்கி எட்டு ஆண்டுகள் ஆகிறது. கடந்த ஏழு ஆண்டுகளில் (25+36+40+40+40+40+40) 261 மாணவ மாணவியருக்கு ரூ.1,43,000.00 கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. முதலாமாண்டு (2006–07ல்) 25 மாணவ மாணவியருக்கு தலா ரூ 200 வீதம் ரூ 5000.00மும், இரண்டாமாண்டு (2007–08ல்) 36 மாணவ மாணவியருக்கு தலா ரூ.500 வீதம் ரூ.18,000.00மும், மூன்றாமாண்டு (2008–09ல்) 40 மாணவ மாணவியருக்கு தலா ரூ.500 வீதம் ரூ.20,000.00மும், நான்காமாண்டு (2009–10ல்) 40 மாணவ மாணவியருக்கு தலா ரூ.500 வீதம் ரூ.20,000.00மும், ஐந்தாமாண்டு (2010–11 ல்) 40 மாணவர்களுக்கு தலா ரூ.500 வீதம் ரூ.20,000.00மும், ஆறாமாண்டு (2011–12ல்) 40 மாணவ மாணவியருக்கு தலா ரூ.750 வீதம் ரூ.30,000.00மும் ஏழாமாண்டு (2012–13ல்) 40 மாணவ மாணவியருக்கு தலா ரூ.750 வீதம் ரூ.30,000.00மும் ஆகமொத்தம் 261 மாணவ மாணவியருக்கு ரூ.1,43,000.00 கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு 19.11.2012 அன்று தஞ்சை பெசன்ட் லாட்ஜ், ஜுபிடர் தியேட்டர் அருகே, தஞ்சாவூரில் உயர்திரு G.M. ஸ்ரீதர் வாண்டையார் தலைமையில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் உயர்திரு கா. பாஸ்கரன், இ.ஆ.ப. மற்றும் டாக்டர் V. வரதராஜன், M.S.FIAMS ஆகியோர் முன்னிலையில் திருமதி செல்வி வரதராஜன், திருமதி யோகா ரவிச்சந்திரன், திருமதி சுபா மதியழகன், திருமதி மங்கையர்திலகம் மற்றும் கூனம்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் திருமதி சரோஜா ஆகியோர் குத்து விளக்கேற்றிட விழா இனிதே துவங்கியது. விழாவில் எங்களது அண்ணன் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப. அவர்களது இரண்டாவது நூலான 'சஸ்ஸக்ஸில் எனது சக்ஸஸ்' என்கிற பயணக்கட்டுரை நூலினை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் உயர்திரு கா. பாஸ்கரன், இ.ஆ.ப. வெளியிட, விழா தலைவர் உயர்திரு G.M. ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள், Dr. V. வரதராஜன், M.S.FIAMS முன்னிலையில் பெற்றுக்கொண்டார்கள். விழாவினை திருமதி மங்கையர்திலகம், திரு கா. ஜெகதீசன், திருமதி விஜயதிலகம், கண்காணிப்பாளர், குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை ஆணையர் அலுவலகம் , சென்னை விழா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள். ஆண்டு அறிக்கையினை திருமதி மங்கையர்திலகம், காசி அய்யா கல்வி அறக்கட்டளை உபதலைவர் அவர்கள் வாசித்தார்கள். டாக்டர் V. வரதராஜன் அவர்கள் முன்னிலையுரையும், உயர்திரு G.M. ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் தலைமை உரையும், உயர்திரு கா. பாஸ்கரன்,இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்கள் சிறப்புரையும் வழங்கினார்கள்.

விழா தொடங்குவதற்கு முன்னர் காசி அய்யா கல்வி அறக்கட்டளையின் ஏழாவது பொதுக்குழு கூட்டம் மற்றும் செயற்குழு கூட்டம் நடந்தது. உயர்திரு G.M. ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள், தலைவர், காசி அய்யா கல்வி அறக்கட்டளை, தலைமை தாங்கினார்கள். கூட்டத்தில் காசி அய்யா கல்வி அறக்கட்டளை செயலாளர், உயர்திரு கா. ஜெகதீசன், உபதலைவர் திருமதி மங்கையர்திலகம், உறுப்பினர் திருமதி லீலாவதி, உறுப்பினர் எஸ். சின்னதுரை மற்றும், உறுப்பினர் திரு. கா. மதியழகன் மற்றும் உறுப்பினர் திருமதி கலாவதி ஆகியோர் கலந்து கொண்டனர். பொதுக்குழு கூட்ட நிகழ்ச்சிக்குப் பிறகு உயர்திரு G.M. ஸ்ரீதர் வாண்டையார் அவர்கள் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில் வீரராகவா மேல் நிலைப்பள்ளியில் படிக்கும் கீழ்க்கண்ட மாணவ மாணவியருக்கு, தலா ரூ 750 கல்வி உதவித்தொகை ரொக்கமாக உயர்திரு கா. பாஸ்கரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களால் வழங்கப்பட்டது. அவர்கள் பெயர் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | A.கோபி | XA |
| 2. | R. தினேஷ் | XA |
| 3. | S. சிவக்குமார் | XA |
| 4. | L. தினேஷ் | XB |
| 5. | E. பாலாஜி | XB |
| 6. | B. கலைவாணன் | XB |
| 7. | K. விஜயலட்சுமி | XC |
| 8. | P. ஜெயப்பிரியா | XC |
| 9. | M. யோகேஸ்வரி | XC |
| 10. | J. ஷபினா | XC |
| 11. | G. அருண்குமார் | XII A |
| 12. | V. மகேஸ்வரி | XII A C/S |
| 13. | S. அஜித் | XII B |
| 14. | V. ஐஸ்வர்யா | XII B |
| 15. | R. விஜயகுமார் | XII C |
| 16. | T. பிரியதர்ஷினி | XII D (O/S) |
| 17. | T. பாலாஜி | XII D (A/A) |
| 18. | J. மார்டின்ராஜ் | XII D (A/A) |
| 19. | P. செல்வபாலாஜி | XII D (A/A) |

கல்யாண சுந்தரம் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும் கீழ்க்கண்ட மாணவ/மாணவியருக்கு தலா ரூ.750 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது:

| | | |
|---|---|---|
| 1. | மு. சரண்குமார் | X E |
| 2. | வி. வசந்தகுமார் | X E |
| 3. | உ. வசந்தி | X G |
| 4. | கே. தமிழ்ச்செல்வி | X H |
| 5. | தி. மணிமேகலா | X L |
| 6. | அ. அரவிந்த குமார் | XII A1 |
| 7. | ப. கரிகாலன் | XII C |
| 8. | க. வெண்ணிலா | XII C |
| 9. | சு. பிரசாந்த் | XII G |
| 10. | மு. பிரகன் நாயகி | XII G |

மேலும், அரசர் மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் கீழ்க்கண்ட மாணவ/மாணவியருக்கு தலா ரூ 750 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது:

| | | |
|---|---|---|
| 1. | V. கார்த்தியாயினி | X A |
| 2. | P. வினித்தா | X B |
| 3. | O.M. பிரவீன் | X C |
| 4. | R. அசோக்ராஜ் | X D |
| 5. | B. கமல்நாத் | X E |
| 6. | S. சரத்குமார் | XII A |
| 7. | G. அனுசுயா | XII A |
| 8. | M. சியாமளா தேவி | XII B |
| 9. | G. மணிமேகலை | XII D |
| 10. | G. பிரேமலதா | XII F |

விழா ஏற்பாடுகளை திரு. கா. ஜெகதீசன் மற்றும் திரு. கா. மதியழகன் ஆகிய நிர்வாகிகள் முன்னின்று செய்தனர். விழாவில் காசிஅய்யா கல்வி அறக்கட்டளை நிர்வாகிகள், முக்கிய பிரமுகர்கள், உறவினர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். விழா நிறைவு பெற்றதும் அனைவருக்கும் இரவு விருந்து வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

| | ரூ |
|---|---|
| காசி அய்யா கல்வி அறக்கட்டளையிலிருந்து பெற்ற தொகை | 35,000,00 |
| தொண்டுள்ளம் கொண்டோரிடம் பெறப்பட்ட தொகை | 4,295.00 |
| 40 மாணவ மாணவியருக்கு தலா ரூ 750 வீதம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது | 30,000.00 |
| பெசண்ட் லாட்ஜ் வாடகை | 1,250.00 |
| விழா அழைப்பிதழ் | 4,320.00 |
| மைக், ஜெனரேட்டர், சேர், டேபிள் வாடகை | 2,500.00 |
| புகைப்படம் | 1,225.00 |
| மொத்த செலவு<br>மொத்த வரவு<br><br>மீதம் இருப்பு | 39,295.00<br>39,295.00<br>---------<br>--<br>--------- |

**விழா இனிதே முடிவுற்றது.**